**நவம்பர் - 8**

**"உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக." - யாத் 20 . 7.**

இந்தக் கற்பனை ஆவிக்குரிய இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்படவில்லை என்றாலும், அதன் ஆவி (போதனை) நமக்கு எப்படி வருகிறது என்று நாம் உடனே கண்டுகொள்ளலாம். கிறிஸ்துவின் நாமத்தை நம்முடைய நாமமாக நாம் தரித்திருக்கிறோம். அந்தத் தலையின் பரிசுத்த நாமம் பிரதிஷ்டை செய்திருக்கிற எல்லோருக்கும் உரியது. இதைப்பற்றிய எண்ணம் எப்படிப்பட்ட கவனத்தை நமக்குக் கொடுக்க வேண்டும். எப்படி தகுந்த விதமாக நாம் நமக்கே இந்த விதமாகச் சொல்லிக் கொள்ள வேண்டும். "நான் கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்கவில்லை என்றும், உலகத்தில் அவருடைய பிரதிநிதியாகவும், ஸ்தானாதிபதியாகவும் என்னுடைய நிலையின் கனத்தையும், கௌரவத்தையும், பொறுப்பையும் உயர்வாக மதிக்கிறேன் என்றும், நான் கவனித்துக் கொள்ள வேண்டும். கூடுமானவரை அந்த நாமத்துக்கு எந்தக் கனவீனத்தையும் கொண்டுவராதபடியும், ஆனால் எதிராக ஒவ்வொரு எண்ணத்திலும், வார்த்தையிலும், கிரியையிலும், அதைக் கனம் பண்ணுவதற்கு நாடிக்கொண்டு நான் கவனமாய் நடப்பேன்." **- Z 04, 73 (R 3329).**

தேவனுடைய நாமம் அவருடைய பெயர், தன்மை, குணம், கீர்த்தி, கனம், உத்தியோகம், வார்த்தை என்பவைகளைக் குறிக்கிறது. பிரதிஷ்டை செய்திருக்கிறவர்கள் தேவனுடைய பிரதிநிதிகளாக அவருடைய நாமத்தை இந்த எல்லா வழிகளிலும் வழங்குகிறார்கள். இப்பொழுது பரீட்ச்சார்த்தமாகவும், உயிர்தெழுதலுக்குப் பிறகு உறுதியாகவும், நித்யமாகவும், அவருடைய நாமத்தை வீணிலே வழங்குவது, தேவனுடைய பிரதிநிதிகளாக நம்முடைய பிரதிஷ்டையில் நமக்கு வருகிற சிலாக்கியங்களை உபயோகிக்க அசட்டை செய்வதையோ அல்லது தகாத வழியில் உபயோகிக்கிறதையோ குறிப்பாகச் சொல்லும். முன் சொல்லப்பட்டதற்கேற்ப, தன்னுடைய பிரதிஷ்டையில் உண்மையாயில்லாதவன் தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்குகிறான். அப்பொழுது, தன்னுடைய பிரதிஷ்டையின் பொருத்தனைகளுக்கு உண்மையுள்ளவனாயிருக்கிறவன், தேவனுடைய நாமத்தைத் தகுந்த விதமாகவும், அதன் நோக்கத்திற்கு இசைவாகவும் வழங்குகிறான். அப்படிச் செய்வதே நம்முடைய அன்றாட நோக்கமாக இருக்க வேண்டும். **- P 34, 159.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**லேவி 19.12, 22.32, 24.10-16; உபா 4.10, 5.29, 10.12,20,21; யோசு 24.14; 1சாமு 2.30; யோபு 21.14, 40.2; நீதி 30.8,9; ரோம 12.1; மத் 10.22, 25.14-29.**

**கோபுர வாசிப்பு : Z 14, 55 (R 5404).**

**வினாக்கள் : தேவனுடைய நாமத்தின் மூலம் இந்த வாரத்தில் என்ன செய்தேன்? எப்படி? ஏன்? பலாபலன் என்ன?**